

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (9.4.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைசெல்வன், எஸ்.எஸ். பாலாஜி, எம்.பாபு, முகமது ஷா நவாஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், தங்கச்சிமடம், நாகப்பட்டினம், பாம்பன், இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் நங்கூரம் மகளிர் கூட்டமைப்பினர் சந்தித்து, மீனவ பெருமக்களின் நல்வாழ்விற்காக 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு புதிய திட்டங்கள் குறித்து சட்டப்பேரவையில் அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், நாகை மாலி, முகமது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந. கௌதமன், மாநில மீனவ அணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) முகாம் அலுவலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட மும்பை திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநகர் பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, ம.நீதிதுரை, மாறன் ஆரியசங்காரன் மற்றும் பம்பாய் திருவள்ளுவர் மன்றத் தலைவரும், மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளருமான ஜேம்ஸ் தேவதாசன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

## 10 சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காத – தமிழ்நாட்டு ஆளுநருக்கு எதிரான உச்சநீதிமன்றத் தீர்ப்பு!

# மாநில உரிமைகளைக் காப்பதில் முதற்படி!

## கேரள முதல்வரின் வலைதளப் பதிவை வரவேற்று – முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, ஏப்.9-

உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததை வரவேற்று - கேரள மாநில முதலமைச்சர் அவர்களின் சமூக வலைதளப் பதிவினை மேற்கோள் காட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-





**பினராயி விஜயன் அவர்களே,**

**அண்மையில் மதுரையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)இன் 24ஆவது அகில இந்திய மாநாட்டில் நாம் பேசியது போல, இந்தத் தீர்ப்பு மாநில உரிமைகளைக் காப்பதில் முதற்படியாக அமைந்துள்ளது. ஆனால் இது வெறும் தொடக்கம்தான்!**

**கூட்டாட்சியியலுக்காகவும் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவும் தொடரும் நமது போராட்டத்தில் இன்னும் செய்ய வேண்டியது ஏராளமாக உள்ளது.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உச்சநீதிமன்றத்தில் போராடி பெற்ற உரிமை!



இந்திய விடுதலைத் திருநாளில்
கொடியேற்றும் உரிமையை
முதலமைச்சர்களுக்கெல்லாம்
பெற்றுக்கொடுத்தார்
முத்தமிழறிஞர் கலைஞர்

யாம்பெற்ற உரிமை
பெறுக இவ்வையகம்
என்று உரிமையைப்
பொதுவுடைமை செய்தார்

அது அன்று

இதோ இன்று
இந்தியாவின்
எல்லா மாநிலங்களுக்கும்
உச்சநீதி மன்றத்தில் போராடி
உயர்கல்வி உரிமையைப்
பெற்றுத் தந்திருக்கிறார்

முதலமைச்சர் முத்துவேல்
கருணாநிதி ஸ்டாலின்
தந்தை வழியில்
தனயன் சரித்திரம் எழுதுகிறார்

முன்னேறுகிறார்;
முதல்வர்களுள்
முதல்வர் ஆகிறார்

இவர் சென்னையில்
இடியிடித்தால்
இந்தியாவெங்கும்
மழைபெய்கிறது

இது
கூரான வெற்றி
மற்றும்
நேரான வெற்றி

உலகமே வாழ்த்துகிறது
எங்கள் உள்ளங்களும்

- கவிப்பேரரசு வைரமுத்து






